29th October 1962]

காடுகள் (விறகு)

*843 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) காட்டிலாகாவுக்குச் சொந்தமான காடுகளில் கிராம மக்கள் விறகு சேகரிக்க ஐந்து ஆண்டுகளுக்கு முன் வருஷக் கட்டணம் எவ்வளவு?

(இ) தற்போது கட்டணம் எவ்வளவு?

(உ) கட்டணம் உயர்த்தப்பட்டிருந்தால் காரணமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) (இ) விறகு காடுகளை காட்டிலாகா ஒப்பந்தக்காரர்களுக்கு ஏலத்தில் விடப்பட்டு ஷை ஒப்பந்தக்காரர்கள் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டதும் டிவிஷன் டிவிஷன்களுக்கு மாறுபட்டதாகவும் உள்ள விகிதங்களுக்குத் தலைச்சுமை, வண்டிச்சுமை அனுமதிச் சீட்டுகள் வழங்குகிறார்கள். சில டிவிஷன்களில் தற்போது இருந்துவரும் விகிதங்களை கொண்ட அறிக்கை[a] இச் சபையின் மெம்பர் களின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த விகிதாசாரங்களி லிருந்து அருகாமையில் ஏதும் மாறுதல் இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த அறிக்கையில், நீலகிரி ஜில்லா வைப்பற்றி ஒரு குறிப்பும் தரவில்லை. முன்பு நீலகிரியில், காட்டி லுள்ள காய்ந்து போன விறகுகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் கட்டணம் இருந்தது. பிறகு அது 12-½ ரூபாயாக மாறியது. இப்பொழுது, பொறுக்கக்கூடாது என்று சமீபத்தில் உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள், கட்டணம் இல்லாமல் காய்ந்து போன விறகுகளைப் பொறுக்கிக் கொள்ள உத்திரவு இடுவாரா, இல்லாவிடில் ஒரு ரூபாய் கட்டணம் வைத்தாவது பொறுக்கிக் கொள்ள உத்திரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அவர்கள் சொல்வது என்னவென்று நான் நினைக்கிறேன் என்றால் 'படாகாஸ்'' கூட்டத்தினருக்கு ஒரு ரூபாய்க்கு கொடுத்துக் கொண்டிருந்தார்கள், ஒரு தலைச்சுமைக்கு. இப்போது 12-1/2 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதைக் குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் முன்பு மிகவும் கீனதிசையில் இருந்தார்கள். இப்பொழுது நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார் கள். அதோடு, காடுகள் அழிக்கப்படாமல் இருக்க வேண்டு மென்றும் வருடத்திற்கு ரூபாய் 12-1/2 என்று வகுக்கப்பட்டிருக் கிறது. அது சரி என்று எண்ணுகிறேன்.

---

a Printed as Appendix III on page 108.